Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkural1@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

# பண்டிகைக் காலத்திற்கு முன்னதாக மஜெஸ்தே ஹேர் கலர் கலெக்ஷனை அறிமுகப்படுத்தி, 700+ சலூன் நிபுணர்களுக்கு கோத்ரேஜ் ப்ரொஃபெஷனல் பயிற்சி அளிக்கிறது

சென்னை 17, அக்டோபர் 2026: முடி பராமரிப்பு, கலரிங், ஸ்டைலிங்

ஆகியவற்றில் தயாரிப் புகளைக் கொண்ட, கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் லிமி டெட் (ஜிசிபிஎல்) நி று வ ன த் தி ன் தொழில் முறை ஹேர் பிராண்டான கோத் ரேஜ் ப்ரொஃபெ ஷனல், தனது சமீபத் திய ஹேர் கலர் கலெக்ஷனான மஜெஸ் தே ஐ வெளியிட் டுள்ளது.

பண்டிகைக் காலம் சலூன்களுக்கு உச்ச வ ரு ¬ க ¬ ய க் கொண்டு வரும் நேரத்தில் கோத்ரேஜ் ப்ரொஃபெஷனலின் அமோனியா இல்லாத கலர் வரம்பான டைமென்ஷன் மூலம் சக்தியூட்டப்பட்ட மஜெஸ்தே அறிமுக மாகிறது.

அரச பாரம்பரியம் மற்றும் விலைமதிப்பற்ற ரத்தினங்களின் பிரகா சத்தால் ஈர்க்கப்பட்ட, மஜெஸ்தே என்பது ராஜாங்க, பிரமாண்ட, சக்திவாய்ந்த மற்றும் நேர்த்தியான நிறம் என்ற கருத்தை மைய மாகக் கொண்டு உரு வாக்கப்பட்டுள்ளது. இது ஒப்பனையாளர் களுக்கு மூன்று விதமான வண்ணச் சாயல்களில் தனித்துவ மான சிகை மாற்றங் களை உருவாக்க உயர்தர கேன்வாஸை வழங்குகிறது.

மெருகூட்டப்பட்ட, எளிதில் ஆடம்பரமான தோற்றத்தை உருவாக்கு கிற ஒரு பழுப்பு தங்க நிறமான ஃபுளோரன்ஸ் கோல்ட், செறிவான ஆழம் மற்றும் ஒளிரும் பிரதிபலிப்புகளுடன் அமைதியான நேர்த்தி யை வெளிப்படுத்து கிறது. ஒரு செப்பு பழுப்பு நிறமான ரோமன் எம்பர், பண்டைய பேரரசு

நவீன ஆடம்பரத்தின் நேர்த்தியால் ஈர்க்கப் பட்டு, செறிவான வெண்கல நிறங்களை யும் ஆழ்ந்த மெரு கூட்டப்பட்ட பழுப்பு நிறத்தையும் ஒன் றிணைக்கிறது. நகர விளக்குகளின் கவர்ச்சி யையும் உயர் நாகரிக அழகையும் பிரதிபலிக் கின்ற ஒரு செம்பழுப்பு நிறமான பாரிசியன் ரூஜ், ஆழமான செந்நிற மணிக்கல் நிறங்கள், வெல்வெட் போன்ற ஒயின் சாயல்கள் மற்றும் ஒளிரும் கருஞ்சிவப்பு பிரதிபலிப்புகளைக் கொண்டுள்ளது.

இந்த அறிமுகத்தைக் குறிக்கும் வகையில், கோத்ரேஜ் புரொஃபெ ஷனல் நிறுவனம் குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் அஸ்ஸாம் உள்ளிட்ட நான்கு மாநிலங்களில் சிகையலங்கார நிபுணர்

மற்றும் சலூன் ஞரிமை யாளர்களை ஒன் றிணைத்து, ஆழ்ந்த தொழில்நுட்ப அமர்வு களை நடத்தியது. கோத்ரேஜ் புரொஃபெ ஷனல் நிறுவனத்தின் தேசிய தொழில் நுட்பத் தலைவர் ஷைலேஷ் மூல்யா தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வுகள், நுட்பங்க¬ ளக் கட்டமைப்பதை யும் மேம்பட்ட வண்ண மூட்டல் செயல்முறை விளக்கங்களையும் இணைத்து, நான்கு நகரங்களில் உள்ள 700க்கும் மேற்பட்ட சலூன் நிபுணர்களுக்கு உலக ளாவிய வண்ணப் போக்குகளைத் தனிப் பயனாக்கப்பட்ட முடி மாற்றங்களாக மாற்று வதற்குத் தேவையான திறன்களை வழங்கின.

---

Rtn Dr R Sathyanarayanan, Editor | 8148231942 | hellomadras.com